செ.வெ.எண். 26/ஜூன் தேதி : 10.06.2016

# புதுவாழ்வு திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




தருமபுரி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஒன்றியங்களில் சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் பென்னாகரம் ஒன்றியம், ஆச்சாரஅள்ளி ஊராட்சியில் புளி பதப்படுத்தும் தொழில் கூட்டமைப்பு, மொரப்பூர் ஒன்றியம் மணியம்பாடி ஊராட்சியில் தையல் பயிற்சி அலகு, நல்லம்பள்ளி ஒன்றியம் நாகர்கூடல் ஊராட்சியில் பால்மரோச எண்ணை பிழிவு மற்றும் மருந்து கூர்க்கன்கிழங்கு அலகும், சமூக பொருளாதார மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் ஆலாபுரம் ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு போன்ற திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியது :-

மொரப்பூர் ஒன்றியம் மணியம்பாடி ஊராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த ஏழை மகளிர்களுக்கு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட்டு ஆயத்த ஆடை நிறுவனமாக செயல்படும். இவர்களுக்கு தருமபுரி மகளிர் அச்சு, எழுதுபொருள் மற்றும் தையல் சங்கத்தில் அனைவரையும் உறுப்பினர்களாக இணைத்து சமூக நலத்துறையின் கீழ் வழங்கப்படும் இலவச சீருடை போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள ஆயத்த ஆடை நிறுவனங்களுடன் சந்தை படுத்துதல் ஏற்படுத்தப்படும்.

பென்னாகரம் ஒன்றியம், ஆச்சாரஅள்ளி ஊராட்சியில் புளி பதப்படுத்தும் தொழில் கூட்டமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. புளி வரத்தை அதிகாரிக்க விவசாயிகளிடமிருந்து புளியமரத்தை குத்தகை (ம) நேரடியாக கொள்முதல் செய்து தூய்மைப்படுத்தி அதனை தருமபுரி மதிகோண்பாளையத்தில் உள்ள குளிர்பான கிடங்கில் வைக்கப்பட வேண்டும். உணவு தர கட்டுபாடு பெறப்பட்டுள்ளது. மேலும் அக்மார்க் தர சான்றிதழ் மற்றும் TIN நம்பர் பெற வேண்டும்.

கூர்க்கன்கிழங்கு சேலம் மாவட்டம், ஆத்தூர் எம்.ஜி.பி நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி தொழில்நுட்ப பயிற்சி மற்றும் துண்டு செய்யப்பட்ட விதை குச்சிகள் நடவு செய்ய வேண்டும். தற்போது பருவ மழை காலம் என்பதால் பயிர் செய்வதற்கு ஏற்ற காலம். கூட்டமைப்பில் உள்ள மகளிர்கள் தங்கள் சொந்த நிலத்தில் இப்பயிர் செய்யலாம். இந்த கூர்க்கன் கிழங்கு ரத்த அழுத்த நோய் சிறந்த மருந்தாக பயன்படுகிறது. பால்மரோச எண்ணை பிழிவிற்கு புள் பயிர் செய்ய வேண்டும். பிற விவசாயிகள் பயிரிட ஊக்குவிக்க வேண்டும்.

சமூக பொருளாதார மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் ஆலாபுரம் ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு மூலம் 210 கறவை மாடுகள் வழங்கப்பட்டு தினசரி பால் உற்பத்தி செய்யப்பட்டு ஆவின் பால் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் மதிப்புக்கூட்டு பொருட்கள் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காப்பீடு மருத்துவ முகாம்கள் நடத்தபட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட குழு அலுவலர் திருமதி.ஆர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி. சுசிலா, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர், தொழிலாளர் நல கூட்டுறவு அலுவலர், தலைமை கண்காணிப்பாளர் (ஊரக வளர்ச்சி முகமை), மாவட்ட திட்ட மேலாளர் புதுவாழ்வு திட்டம், பணியாளர்கள் மற்றும் அனைத்து தொழில் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.